# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590


## <u>ஆணை நாள். 14.05.2026</u>

## <u>முன்னிலை</u>

**திரு. அபய் குமார் சிங், இ.கா.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். CP 2598/F/2025</u>**

திரு.பால்ராஜ் -- புகார்தாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர், -- பொது அதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி வட்டம்,
கிருஷ்ணகிரி - 635 109.

**<u>ஆணை</u>**

இவ்வாணையத்தில் இன்று 14.05.2026 முற்பகல் நடைபெற்ற விசாரணைக்கு புகார்தாரர் திரு.பால்ராஜ் அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர், திரு.வெ.கணேசன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. புகார்தாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 09.08.2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களுக்கு தாக்கல் செய்துள்ள மனுவில் ***<u>“தகப்பனார் பெயரில் உள்ள தனிப்பட்டாவில் எந்த ஆவணத்தின் அடிப்படையில் வாரிசுகளின் பெயர்கள் சேர்க்கப்படுகிறது”</u>*** என்பன போன்ற 5 இனங்களில் தகவல்களை கோரியுள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள்

ந.க.எண்.4967/2025/ஜே1, 17.04.2025 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 6(3)-ன் கீழ் காலதாமதாக மாற்றம் செய்து மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் தொடர்பாக பொதுத் தகவல் அலுவலர் மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம் அவர்களை தொடர்பு கொள்ளுமாறு புகார்தாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம் அவர்கள் ந.க.2543/2025/அ3, 07.05.2025 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

4. பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல்கள் கிடைக்கப்பெறாததால் புகார்தாரர் 28.05.2025 தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 18(1)-ன் கீழ் புகார் மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 14.05.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் 09.08.2023 தேதியிட்ட மனுவிற்கு ந.க.எண்.2543/2025/அ3, 28.05.2026 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக இனம் வாரியான தகவல்களை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து அதன் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். பொது அதிகார அமைப்பினால் வழங்கப்பட்டுள்ள தகவல்களை பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் போதுமானதாக கருதுகிறது. மேலும், உரிய காலத்தில் தகவல் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு இவ்வாணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

***மனுதாரரின் 09.08.2023 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)ன் கீழான மனுவில் கோரியுள்ள இனங்களுக்கு உரிய காலத்தில் (30 தினங்களுக்குள்) தகவல் வழங்காத அப்போதைய பொதுத்தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களுக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன்கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை பெற்று 19.06.2026 அன்று தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.***

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண். CP 1835/F/2025</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

1. **பொதுத் தகவல் அலுவலர் /**
   தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   கிருஷ்ணகிரி வட்டம்,
   கிருஷ்ணகிரி - 635 115.

2. **அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் /**
   **மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்),**
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   கிருஷ்ணகிரி மாவட்டம்.
   **(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வழியாக)**

**<u>மனுதாரர்</u>**

திரு.பால்ராஜ்,
எண்.1/753, ஜமேதார் மேடு,
காவேரிப்பட்டினம் அஞ்சல்,
கிருஷ்ணகிரி - 635 112.

**<u>நகல்</u>**

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை - 35 (For follow up)

Copy to file: RV/PA
15.05.2026